# TNPSC TET SI EXAM

**2. 6ஆம் வகுப்பு Q அறிவியல் தேர்வு**

6th Standard

1) பாதையை தவறவிட்ட ஜிக்கிக்கு உதவுங்கள் , ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்கு செல்லும் தொலைவு : மீட்டர் ; வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்லும் தொலைவு : ?

(a) சென்டி மீட்டர் (b) மீட்டர் (c) மில்லிமீட்டர் **(d) கிலோ மீட்டர்**

2) ராஜா சென்டிமீட்டரில் உள்ள பொருள்களின் பட்டியலையும் , மீட்டரில் உள்ள பொருட்களின் பட்டியலையும் தயாரித்தான் .கீழே உள்ளவற்றில் சென்டிமீட்டருக்கு பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு

(a) வாழைப்பழத்தின் நீளம் (b) தண்ணிர் புட்டியின் உயரம்

(c) தொலைகாட்சி பெட்டியின் அகலம் **(d) சல்வாரின் மேற்சட்டையின் நீளம்**

3) பூமியிலிருந்து விண்மீனின் தொலைவை அளக்கப் பயன்படும் அலகு எது?

(a) மீட்டர் (b) கிலோ மீட்டர் **(c) ஒளி ஆண்டு** (d) இவை அனைத்தும்

4) பால் பாக்கெட்டின் நிறை, ஆரஞ்சு பழச்சாறு பாக்கெட்டின் நிறையை விட 432 கிராம் கூடுதலானது.ஆரஞ்சு பழச்சாற்றின் பாக்கெட்டின் நிறை 212 கி.பால்பாக்கெட் மற்றும் ஆரஞ்சு பழச்சாறு பாக்கெட்டின் மொத்த நிறை யாது?

(a) 950 கி **(b) 856 கி** (c) 986 கி (d) 748 கி

5) திருமதி .ராணி தன் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு 10.30 a .m க்கு புறப்பட்டுப் போனாள்.மாலை வீட் டிற்கு 4.30P.m க்கு திரும்பி வந்தாள்.இந்த காலத்தில் அவளின் இடப்பெயர்ச்சி என்ன? (இராணியின் வீட்டிலிருந்து அலுவலகம் உள்ளத் தொலைவு 1 கி.மீ )?

**(a) 0** (b) 1/6 கி.மீ (c) 1 கி.மீ (d) கூற இயலவில்லை

WHATSAPP 8056206308

6) நிறையின் SI அலகு

(a) கிராம் **(b) கிலோகிராம்** (c) மில்லிகிராம் (d) டன்

7) ________ ஒரு அடிப்படை அளவு ஆகும்

(a) பருமன் (b) பரப்பளவு **(c) நீளம்** (d) அடர்த்தி

8) திரவத்தின் பருமனானது பொதுவாக_____ ல் அளவிடப்படுகிறது.

(a) கன மீட்டர் **(b) லிட்டர்** (c) மீ$^2$ (d) கிராம்

9) நிலவில் ஈர்ப்புவிசை புவியைப்போல______ ஆகும்.

**(a) 1/6** (b) 1/16 (c) 6 மடங்கு (d) 16 மடங்கு

10) முற்காலத்தில் மக்கள் பகல் நேரத்தைக் கணக்கிட_______ பயன்படுத்தினர்.

(a) நிறுத்துக் கடிகாரங்கள் (b) மின்னணு கடிகாரங்கள் (c) அணுக்கடிகாரங்கள் **(d) சூரியக் கடிகாரங்கள்**

11) ஒய்வு மற்றும் இயக்கத்தில் உள்ளப் பொருளைப் பற்றி படிக்கும் இயற்பியல் பிரிவு

**(a) இயக்கவியல்** (b) ஒலியியல் (c) ஒளியியல் (d) மின்னியல்

12) இந்தியாவில் நிலையான அலகுகள் NPL, புதுதில்லி -ஆல் பராமரிக்கப்படுகிறது. NPL என்பது

(a) National Public Library (b) North Physical Library **(c) National Physical Laboratory** (d) National Public Laboratory

13) 1 மில்லேனியம் என்பது

(a) 10 வருடங்கள் (b) 100 வருடங்கள் **(c) 1000 வருடங்கள்** (d) 2000 வருடங்கள்

14) எந்த வாய்பாடு சரியானது?

(a) திசைவேகம் = $\frac{\text{தொலைவு}}{\text{காலம்}}$ (b) வேகம் = $\frac{\text{இடப்பெயர்ச்சி}}{\text{காலம்}}$ (c) வேகம் = நீளம் x அகலம்

**(d) முடுக்கம் =** $\frac{\text{திசைவேக மாறுபாடு}}{\text{காலம்}}$

15) ஒரு பொருளின் எல்லா பாகங்களும் சமகால அளவில் ஒரே தொலைவு செல்லுமானால் அப்பொருளின் இயக்கம்

(a) நேர்மாறான இயக்கம் (b) சுழற்சி இயக்கம் (c) வட்ட இயக்கம்

**(d) மாறுபடும் இயக்கம்**

16) 'கேரம் போர்ட்'ல் உள்ள காய்களின் இயக்கம்

**(a) வளைவுப்பாதை இயக்கம்** (b) வட்ட இயக்கம் (c) கால ஒழுங்கு இயக்கம்

(d) தற்சுழற்சி இயக்கம்

17) கால ஒழுங்கு இயக்கத்திற்கு எடுத்துக் காட்டு,

(a) வளைவு பாதையில் செல்லும் மகிழந்தின் இயக்கம்

**(b) வீரர்களின் அணி நடை இயக்கம்** (c) காற்றில் பறக்கும் பறவையின் இயக்கம்

(d) கீழே இறங்கும் மின் தூக்கியின் இயக்கம்

18) ஒரு வாகனம் கடந்த தொலைவைக் கணக்கிடும் கருவி

(a) மேனோ மீட்டர் (b) ஸ்பீடோ மீட்டர் **(c) ஓடோ மீட்டர்** (d) இவை ஒன்றும் இல்லை

19) தொடா விசைக்கு ஓர் எடுத்துக்காட்டு

(a) கால்பந்தை உதைத்தல் (b) கிணற்றிலிருந்து நீர் இறைத்தல்

**(c) காந்தம் இரும்பைக் கவர்தல்** (d) மட்டை வீச்சாளர் பந்தை மட்டையால் அடித்தல்

20) கொசுக்கள் அல்லது ஈக்களின் இயக்கம்

(a) வட்ட இயக்கம் **(b) ஒழுங்கற்ற இயக்கம்** (c) நேர்க்கோட்டு இயக்கம்

(d) சுழற்சி இயக்கம்

21) சராசரி வேகம் (s) =

(a) d x t (b) d + t (c) t/d **(d) d/t**

22) அலைவானது அதிவேகமாக நடைபெறும் இயக்கத்தை______ என அழைக்கிறோம்.

**(a) அதிர்வுறுதல்** (b) இயக்கம் (c) தற்சுழற்சி இயக்கம் (d) சுழற்சி இயக்கம்

23) இதயத்துடிப்பு ஒரு_____

**(a) கால ஒழுங்கு இயக்கம்** (b) கூட்டு இயக்கம் (c) வட்ட இயக்கம் (d) சீரற்ற இயக்கம்

24) திண்மம் - திண்மம் சேர்ந்த கலவையில் எடையில் வேறுபடும் தொன்மத்தைப் பிரிக்க 'X' என்ற பிரித்தல் முறையைப் பயன்படுத்துகிறோம்.
'X' என்பது குறிப்பது,

(a) சலித்தல் (b) கைகளால் தேர்ந்தெடுத்தல் (c) கதிரடித்தல் **(d) தூற்றுதல்**

25) இரண்டுக்கு மேற்பட்ட வாயுக்களைப் பிரிக்க பயன்படும் முறை,

(a) தெளிய வைத்தல் **(b) நீர்மமாக்குதல்** (c) கைகளால் தேர்தெடுத்தல்

(d) தெளிய வைத்து இறுத்தல்

26) கீழ்க்கண்டவற்றில் கலவை எது?

(a) ஆக்ஸிஜன் (b) கார்பன் டை ஆக்சைடு (c) ஹைட்ரஜன் **(d) காற்று**

27) கீழ்க்கண்டவற்றில் எது திண்மம் - வாயு கலவைக்கு எடுத்துக்காட்டு?

(a) மண் **(b) புகை** (c) ஈரப்பதம் (d) பனித்துளி

28) தூய பொருள் என்பது,

WHATSAPP 8056206308

**(a) ஒரே வகையான அணுக்கள் அல்லது மூலக்கூறுகளால் ஆனது.**
(b) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மூலக்கூறுகளால் ஆனது. (c) ஒருபடித்தான கலவை.
(d) மேற்கண்ட அனைத்தும்.

29) ஒரு கலவையில், அதன் பகுதிப் பொருட்கள்

(a) ஒரே மாதிரியானப் பண்புகளைப் பெற்றிருக்கும்.
(b) கலவையின் பண்ப்பைப் பெற்றிருக்கும்.
**(c) அதற்குரியப் பண்புகளைப் பெற்றிருக்கும்.** (d) பண்புகள் இல்லை

30) வாயுவை திரவமாக மாற்றும் முறை

(a) தெளிய வைத்து இறுத்தல் (b) பதங்கமாதல் **(c) குளிர்வித்தல்** (d) படிய வைத்தல்

31) காற்றூட்டப்பட்ட குளிர் பானங்களில் காணப்படுவது,

(a) திண்மம் - திண்மம் (b) திரவம்-திண்மம் **(c) வாயு - திரவம்** (d) திரவம் - திரவம்

32) ______ என்பது ஒரே வகை அணுக்களால் ஆனது.

(a) அணு **(b) தனிமம்** (c) சேர்மம் (d) கலவை

33) ______ முறை மூலம் நீர்மங்களில் கரைந்துள்ள திண்மங்களைப் பிரிக்கலாம்.

**(a) கடைதல்** (b) கைகளால் தெரிந்தெடுத்தல் (c) வடிகட்டுதல் (d) தூற்றல்

34) தாவரத் தண்டுகளிலிருந்து தானியங்கள்_____ முறையில் பிரித்தெடுக்கப்படுகிறது.

(a) கடைதல் (b) தூற்றுதல் **(c) கதிரடித்தல்** (d) சலித்தல்

35) அடியில் தங்கும் வண்டலை பாதிக்காத வண்ணம் மேல் அடுக்கில் உள்ள நீரினை கவனமாக மற்றொரு கலனிற்கு மாற்றுதலே _____ ஆகும்.

**(a) தெளியவைத்து இறுத்தல்** (b) வடிகட்டுதல் (c) படிய வைத்தல் (d) ஆவியாதல்

36) வடிதாளில் தங்கிவிடும் கரையாத பகுதிக்கு ______ என்று பெயர்.

(a) வண்டல் (b) வடிநீர் **(c) வீழ்படிவு** (d) வடிகட்டி

37) முளை குருத்திலிருந்து தோன்றாமல் தாவரத்தின் மற்ற பக்கத்திலிருந்து தோன்றுவது

(a) ஏரிபைலஸ் வேர் (b) வேர் தண்டு **(c) வேற்றிட வேர்** (d) சல்லி வேர்

38) வேர் முண்டு ____ ல் காணப்படுகிறது.

**(a) பட்டாணி** (b) கோதுமை (c) கடுகு (d) அரிசி

39) கூம்பு வடிவ வேர் காணப்படுவது ______

(a) சர்க்கரை வள்ளிக் கிழங்கு (b) பாலியா (c) அஸ்பாரகஸ் **(d) கேரட்**

40) முதன்மை வேர் மற்றும் பக்க வேர் காணப்படுவது _____ ல்.

(a) வேற்றிட வேர் **(b) ஆணி வேர்** (c) சல்லி வேர் (d) விந்தணு வேர்

41) தாவரங்களில் மலர் எந்த தொகுப்பில் காணப்படுகிறது.

(a) வேர் தொகுப்பு **(b) தண்டுத் தொகுப்பு** (c) இரண்டிலும் (d) இவை எதிலும் இல்லை

42) எது உறுதியான தண்டைப் பெற்றுள்ளது?

(a) சிறு செடி (b) புதர் செடி **(c) மரம்** (d) எதுவும் இல்லை

43) தாவரங்கள் தான் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப தங்களைத் தகவமைத்துக் கொள்ளும் என்பது அபிக்குத் தெரியும். அவன் ஒரு தாவரத்தின் பின்வரும் பண்புகளைக் கவனிக்கிறான்.
(i) அதில் அதிக கிளைகளும், இலைகளும் உள்ளன.
(ii) கோடை வெப்பத்தைத் தாங்கக் கூடியதாக உள்ளது.
(iii) இலையுதிர் காலத்தில் தன் இலைகளை உதிர்த்தது.
ஆனால் அவன் எவ்வகையான தாவரம் என்பதை அறிவதில் குழுப்பம் அடைந்தான். உன்னால் அவனுக்கு உதவு முடியுமா?

**(a) அவை நிலத்தில் வாழக் கூடிய தாவரம்** (b) மலைப் பகுதியில் காணப்படும் தாவரம்
(c) நீருக்கடியில் வாழும் தாவரம் (d) சதுப்பு நிலத்தில் வாழக்கூடிய தாவரம்

WHATSAPP 8056206308

44) கீழே சிலத் தாவரங்களும் அவற்றின் வாழிடமும் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தவறாக பொருந்தியதை கண்டுபிடி.

(a)

| தாவரம் | வாழிடம் |
|---|---|
| சதுப்பு நிலக்கோடு | சதுப்புநிறம் |

(b)

| தாவரம் | வாழிடம் |
|---|---|
| தென்னை | கடற்கரைப் பகுதி |

**(c)**

| **தாவரம்** | **வாழிடம்** |
|---|---|
| **கள்ளிச் செடி** | **மலைப்பகுதி** |

(d)

| தாவரம் | வாழிடம் |
|---|---|
| மா | நிலப்பகுதி |

45) ஸ்ரேயா தன் வீட்டின் அருகில் உள்ள குளத்தில் இருந்து ஒரு தாமரை செடியைப் பிடுங்கினாள். அதன் தண்டு மென்மையாக, நீளமாக, உள்ளீடற்று உள்ளதை கவனித்தாள். தாமரையில் தண்டின் பணி என்ன?

**(a) இலைகள் நீரில் மிதப்பதற்கு இவை பயன்படுகிறது**

(b) மண்ணை உறிஞ்ச பயன்படுகிறது

(c) தாவரத்தை மண்ணில் நிலைநிறுத்த பயன்படுகிறது (d) மலரை அழகாக்க

46) தாவரங்கள் இலையின் அடிப்புறத்தில் வழியாக அதிகப்படியான நீரை வெளியேற்றுகிறது. ஆனால் பாலைவனப் பகுதியில் உள்ளத் தாவரம் நீராவிப்போக்கைக் குறைக்க வேண்டும். ஏனெனில் பாலைவனப்பகுதியில் நீர் பற்றாக்குறைக் காணப்படும். இந்த சூழலைச் சமாளிக்க தாவரத்தில் எம்மாதிரியான தகவமைப்புக் காணப்படுகிறது.

(a) இவை அதிகக் கிளைகள் மற்றும் இலைகளைப் பெற்றுள்ளது

(b) கோடை காலத்தில் இலைகளை இவை உதிர்ப்பதில்லை

(c) நிலத்திற்கு மேற்பகுதியில் வேர்களைப் பெற்றுள்ளது

**(d) இவற்றில் இலைகள் முட்களாக மாற்றுரு பெற்றுள்ளது**

47) கீழ்க்கண்டவற்றில் எதற்கு இலைத்துளைகள் இல்லை?

**(a) நீர் மூழ்கிய தாவரம்** (b) நிலைத்தத் தாவரங்கள் (c) மிதக்கும் தாவரங்கள்

(d) பசுமை மாறாத் தாவரங்கள்

48) கள்ளிச் செடியில் ஒளிச்சேர்க்கை எதன் மூலம் நடைபெறுகிறது.

(a) இலை (b) முட்கள் (c) வேர்கள் **(d) தண்டு**

49) கீழ்க்கண்ட எந்தத் தாவரத்திற்கு மண் தேவையில்லை?

(a) கள்ளிச்செடி (b) பெரணி **(c) நீர் பதுமராகம்** (d) குடுவைத் தாவரம்

50) _______ என்பது நிலத்துக்கு கீழே காணப்படும் தாவரத்தின் முக்கிய அச்சாகும்.

(a) தண்டு (b) இலைகள் **(c) வேர்** (d) மலர்கள்

51) தண்டுத் தொகுப்பின் மைய அச்சு_______ என அழைக்கப்படும்.

(a) கணு **(b) தண்டு** (c) நுனி மொட்டு (d) கோணமொட்டு

52) _______ போன்ற தாவரங்களில் தண்டுப் பகுதியில் உணவு சேமித்து வைக்கப்படுகிறது.

(a) கேரட் (b) பீட்ரூட் (c) நூல்கோல் **(d) கரும்பு**

53) தண்டையும் இலையையும் இணைக்கும் பகுதிக்கு_____ என்று பெயர்.

**(a) இலைக் காம்பு** (b) இலையடிப்பகுதி (c) இலையடிச் செதில்கள் (d) மையநரம்பு

54) ______ நன்னீரில் காணப்படும் தாவரமாகும்.

**(a) அல்லி** (b) தாவரமிதவைகள் (c) கடல் பாசிகள் (d) ஈரநிலத் தாவரங்கள்

55) நீரின் அளவு மிகக்குறைவாக உள்ள இடத்தை______ என்கிறோம்.

(a) புல்வெளி (b) காடுகள் **(c) பாலைவனம்** (d) மலைகள்

56) _______ மாதம் முதல் திங்கட்கிழமை உலக வாழிட நாளாக அனுசரிக்கப்படுகிறது.

(a) ஆகஸ்ட் (b) ஜூன் **(c) அக்டோபர்** (d) செப்டம்பர்

57) மெலிந்த தண்டு உடைய தாவரங்கள்_______ எனும் சிறப்பு அம்சத்தைப் பெற்றுள்ளன.

WHATSAPP 8056206308

**(b) பற்றுக்கம்பி**

(a) பின்னு கொடி (c) இலைப்பரப்பு (d) இலைக்காம்பு

58) கீழ்க்கண்டவற்றில் எது சூழ்நிலை மண்டலத்தின் உயிர் காரணி?

(a) நீர் (b) மண் **(c) மரம்** (d) குளம்

59) கீழ்கண்ட எந்த வார்த்தை "சுற்றுப்புறத்தோடு ஒத்துப்போதல்" என்ற வார்த்தையின் அர்த்தமாகும்.

**(a) வாழிடம்** (b) புற அமைப்பு ஒன்றிக் காணப்படுதல் (c) கோடைக்கால உறக்கம்

(d) குளிர்கால உறக்கம்

60) மீன்கள் செவுள் மூலம் சுவாசிக்கிறது. செவுள்கள் இரத்த நாளங்களோடு தொடர்புடையது. செவுள்கள் மீன்களுக்கு,

(a) காற்றிலிருந்து உயர்வளி எடுக்கப் பயன்படுகிறது.

**(b) நீரில் கரைந்துள்ள உயிர்வளியை எடுக்கப் பயன்படுகிறது.**

(c) நீரில் கரைந்துள்ள உயிர்வளியை எடுக்கப் பயன்படுகிறது.

(d) கழிவுகளை நீரில் வெளியேற்ற பயன்படுகிறது.

61) இலைப் பூச்சி பார்ப்பதற்கு இலை போன்றே உள்ளது. பனிக்கரடி பனிப்பகுதிகளில் வெள்ளைநிற உரோமத்தைப் பெற்றிருக்கிறது. இவை இரண்டும் பல்வேறு வகையில் வேறுபட்டு இருந்தாலும் இவற்றிற்கு உள்ள ஒற்றுமை என்ன?

(a) தன் உடலை எதிரிகளைத் தாக்க பயன்படுகிறது.

**(b) தன் உடல் அமைப்பால் எதிரிகளை குழப்பம் அடையச் செய்கிறது.**

(c) தன் உடலைப் பயன்படுத்தி உணவு தயாரிக்கிறது.

(d) அதிக தூரம் பயணிப்பதால் எதிரிகளிடம் இருந்து தங்களைக் காத்துக் கொள்கிறது.


62) ஜான் விலங்குகளின் இடப்பெயர்ச்சி பற்றி 'T' என்ற ஒரு கட்டுரை தயாரித்தான். 'Y' என்ற விலங்கு நீந்தும் மற்றும் தாவி தாவிச் செல்லும். கீழ்க்கண்ட விலங்குகளில் எது 'Y'

(a) முயல் (b) வாத்து **(c) தவளை** (d) மீன்

63) கீழ்க்கண்ட எந்த விலங்கு கோடை கால உறக்கத்திற்கு உட்படும்.

(a) ஒட்டகம் (b) திமிங்கலம் **(c) பல்லி** (d) டால்பின்

64) மீன் மற்றும் நண்டு நீரில் வாழக்கூடிய விலங்குகள். இவை இரண்டுக்கும் ஒரு சில ஒற்றுமைகள் உள்ளன. 'X' என்பது எந்த ஒற்றுமையைக் குறிக்கிறது?




(a) துடுப்புகள் நீந்த பயன்படுகிறது. (b) முதுகெலும்பு காணப்படுகிறது

(c) கூர்மையான படகு போன்ற உடல் அமைப்பு **(d) சுவாசிப்பதற்கு செவுள்கள் உள்ளன**

65) கீழ்க்கண்ட எந்த பறவை கடுங்குளிர் காலத்தில் பனிப்பிரதேசத்தில் வாழ முடியும்.

(a) நெருப்புக் கோழி (b) ஈமு **(c) பென்குயின்** (d) சைபீரியன் நண்டு

66) கீழ்க்கண்ட எது விலங்குகள் எதிரிகளிடமிருந்து தங்களை பாதுகாப்பதற்கான தற்காப்புக்கான தகவமைப்பு இல்லை?

**(a) வலசை போதல்** (b) நிறத்தை மாற்றுதல் (c) குழுவாக செல்லுதல்

(d) கண் போன்ற அமைப்பு உடலில் காணப்படுதல்

67) 'பாலைவனக் கப்பல்' என அழைக்கப்படுவது எது?

(a) எருது **(b) ஒட்டகம்** (c) கழுதை (d) குதிரை

68) ஆமையின் எந்த உறுப்பு எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள உதவுகிறது.

(a) அதன் சிறிய கண்கள் (b) பெரிய கால்கள் **(c) தடிமனான ஓடு** (d) பெரிய வாய்

69) மண்புழுவில் சுவாசம் இதன் மூலம் நடைபெறுகிறது.

WHATSAPP 8056206308

(a) நாசி **(b) தோல்** (c) வாண் (d) இதில் எதுவும் இல்லை

70) குதிரை: நில வாழ் உயிரி: ஆமை: _______

**(a) நில வாழ் உயிரி** (b) நீர் வாழ் உயிரி (c) இரு வாழ்வி (d) முதுகெலும்பு உயிரி

71) பொய்கால்கள் மூலம் இடப்பெயர்ச்சி செய்வது எது?

(a) பாரமீசியம் (b) யூக்ளினா **(c) அமீபா** (d) பிளாஸ்மோடியம்

72) அமீபா எவ்வாறு தன் உணவை செரிமானம் அடையச் செய்கிறது.

**(a) நொதிகள் நிறைந்த உணவுக் குமில் விழுங்கி உணவைச் செரிமானம் அடையச் செய்கிறது.**

(b) தன் உடலில் செல் சவ்வில் உள்ள பல் போன்ற நீட்சி மூலம்

(c) தன் இரப்பையில் உணவை செரிக்கிறது.

(d) எண்டோபிளாஸ்மிக் வலைப்பின்னலில் உள்ள புரதம் மூலம் உணவை உடைத்து, பிற்கால தேவைக்கு பயன்படுத்துகிறது.

73) செல் உயிரிக்கு ஓர் எடுத்துக்காட்டு

**(a) யூக்ளினா** (b) மிதவை உயிரி (c) கரப்பான்பூச்சி (d) பென்குயின்

74) பாரமீசியம் தன்னுடைய_______ மூலம் இடப்பெயர்ச்சி செய்கிறது.

(a) சிறிய கால்கள் (b) கசையிழைகள் **(c) குறு இழைகள்** (d) போலிக்கால்கள்

75) பல்லிகள்_____ மூலம் சுவாசிக்கின்றன.

(a) செவுள்கள் **(b) நுரையீரல்கள்** (c) தோல் (d) மூச்சுக்குழாய்கள்

76) பறவைகளின் முன்னங்கால்கள்_______ ஆக மாறுபாடு அடைந்துள்ளன.

(a) கால்கள் (b) துடுப்புகள் (c) வால்கள் **(d) இறக்கைகள்**

77) _______ பாலைவனக் கப்பல் என அழைக்கப்படுகிறது.

(a) சிங்கம் (b) கள்ளிச்செடி **(c) ஒட்டகம்** (d) கங்காரு

78) ஒட்டகத்தின் திமில் பகுதியில்_______ ஐ சேமித்து வைத்துக் கொள்கிறது.

(a) நீர் (b) இரத்தம் (c) உணவு **(d) கொழுப்பு**

79) வரையாடு மலைப்பகுதிகளில் ஓடுவதற்காக______ பெற்றுள்ளன.

(a) திண்டுகால்கள் **(b) வலுவான குளம்புகள்** (c) நீண்ட கால்கள்


(d) கூர்நகங்கள் கொண்ட கால்கள்

80) கீழ்க்காணும் எந்த ஊட்டச்சத்து உடல் செயல்களுக்கு ஏற்றது?

(a) கார்போ ஹைட்ரேட் (b) புரதம் (c) கொழுப்பு மற்றும் கார்போஹைட்ரேட்

**(d) வைட்டமின் மற்றும் தாது உப்புகள்**

81) கொடுக்கப்பட்ட உணவு கோபுரத்தைப் பார்த்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.




3 ஆம் ஊட்ட நிலையில் உள்ள உணவுப் பொருள்களில் அதிகம் காணப்படுவது

(a) கார்போஹைட்ரேட் **(b) கொழுப்பு** (c) புரதம் (d) வைட்டமின்

82) நிரப்புக 

_______________.

(a) கொழுப்பு (b) வைட்டமின் **(c) சர்க்கரை** (d) உப்பு

83) புரதம் எளிய பொருளாக கீழ்க்கண்ட பகுதியில் உடைக்கப்படுகிறது.

(a) வாய் **(b) இரப்பை** (c) பெருங்குடல் (d) சிறுகுடல்

84) கீழ்க்கண்ட எந்த முறை அஸ்மாவால் பாலை கெடாமல் பாதுகாக்க பின்பற்றப்பட்டது.

WHATSAPP 8056206308

(a) அவள் உப்புக் கரைசலை பாலில் சேர்த்தாள்.
**(b) அவள் பாலைக் காய்ச்சி குளிர்சாதனம் பெட்டியில் வைத்தாள்**
(c) அவள் சர்க்கரைக் கரைசலைப் பாலில் சேர்த்தாள்
(d) அவள் பாலை வறட்சியடையச் செய்தாள்.

85) ORS கரைசல் கீழ்க்கண்ட நாட்களுக்கு மேல் பத்திரப்படுத்தி வைக்கக் கூடாது.

**(a) 12 மணி நேரம்** (b) 24 மணி நேரம் (c) 36 மணி நேரம் (d) 48 மணி நேரம்

86) கீழ்க்கண்ட எந்த நுண்ணுயிரி வளிமண்டலத்தின் நைட்ரஜன் சமநிலையை சீராக வைக்கிறது.

(a) வைரஸ் **(b) பாக்டீரியா** (c) பாசி (d) புரோட்டோசோவா

87) கீழ்க்கண்ட எது பாக்டீரியாவால் தயாரிக்கப்படுகிறது?

(a) நுண்ணுயிர் எதிர்பொருள் பாக்டீரியா (b) பாலாடைக் கட்டி (c) தயிர்
**(d) இவை அனைத்தும்**

88) காலராவை உருவாக்கும் பாக்டீரியா

(a) ஸ்ட்ரெப்டோக்கஸ் (b) கிளாஸ்டிரீடியம் (c) பாஸ்டுல்லா **(d) விப்ரியோ**

89) வைரஸ் காய்ச்சல் உருவாக்க காரணம்

(a) திறந்த காப்சிட் **(b) மூடிய காப்சிட்** (c) திறந்த பாலி ஹைட்ரல் காப்சிட்
(d) காப்சிட் இல்லை.

90) _____ சர்க்கரை, ஸ்டார்ச் மற்றும் நார்ச்சத்து உணவு வடிவத்தில் காணப்படுகிறது.

(a) கொழுப்பு **(b) கார்போஹைட்ரேட்** (c) வைட்டமின் (d) புரதம்

91) கொழுப்பு ஒரு______ உணவாகும்.

(a) உடல் வளர்ச்சிக்கான (b) பாதுகாக்கும் **(c) ஆற்றல் தரும்** (d) சரிவிகித

92) சோயாபீன்ஸில் அதிக_______ உள்ளது.

**(a) புரதம்** (b) கொழுப்பு (c) வைட்டமின் (d) கார்போஹைட்ரேட்

93) வைட்டமின் C குறைபாட்டால் உண்டாகும் நோய்______

(a) ரிக்கெட்ஸ் (b) பெரி பெரி (c) மாலைக்கண் நோய் **(d) ஸ்கர்வி**

94) ________ பொதுவான உடல் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தத் தேவைப்படுகின்றன.

(a) வைட்டமின்கள் **(b) தாது உப்புகள்** (c) கொழுப்புகள் (d) கார்போஹைட்ரேட்டுகள்

95) ______ என்பது புரச்சத்து குறைபாட்டு நோயாகும்.

(a) ரிக்கெட்ஸ் **(b) மராஸ்மஸ்** (c) காய்டர் (d) இரத்த சோகை

96) அசுத்தமான நீரின் மூலம்_______ பரவுகிறது.

(a) டெட்டனஸ் (b) காசநோய் (c) நிமோனியா **(d) காலரா**

97) _______ வைரஸ் நுண்கிருமியால் உண்டாகும் நோயாகும்.

(a) குவாஷியர்கர் (b) நிமோனியா **(c) மஞ்சள் காமாலை** (d) டைபாய்டு

98) சட்டைப் பைக்குள் வைக்கும் அளவிற்தச் சிறியதாக உள்ள கணினியின் ஒரு வடிவம் தான்______

(a) கைக்கணினி (டேப்லட்) (b) கணிப்பான் (c) மடிக்கணினி **(d) திறன்பேசி**

99) கணினியின் தந்தை என அழைக்கப்படுபவர்_____

(a) எடிசன் (b) பில்கேட்ஸ் **(c) சார்லஸ் பாப்பேஜ்** (d) சார்லஸ் டார்வின்

100) முதலாம் தலைமுறைக்கணினி என்பது______ ஆகும்.

(a) மின்மயப்பெருக்கி **(b) வெற்றிடக் குழாய்கள்** (c) ஒருங்கிணைந்த சுற்று
(d) நுண் செயலி

101) மூன்றாம் தலைமுறை கணினி_______ என்பதாகும்.

WHATSAPP 8056206308

(a) மின்மயப்பெருக்கி (b) வெற்றிடக்குழாய்கள் **(c) ஒருங்கிணைந்த சுற்று**
(d) நுண்செயலிகள்

102) _______ ஒரு உள்ளீட்டுக் கருவியாகும்.

(a) கணினிதிரை **(b) விசைப்பலகை** (c) அச்சுப்பொறி (d) ஒலிபெருக்கி

103) SI அலகு முறையில் நீளத்தின் அலகு _____________

**மீ**

104) 500 கிராம் = _____________ கிலோகிராம்.

**அரை**

105) டெல்லிக்கு, சென்னைக்கும் இடையில் உள்ள தொலைவு _________ என்ற அலகால் அளவிடப்படுகிறது.

**கிலோ மீட்டர்**

106) 1 மீ = ________ செ.மீ

**100**

107) 5 கி.மீ = _____________ மீ.

**5000**

108) சாலையில் நேராகச் செல்லும் ஒரு வண்டியின் இயக்கம் _____________

**நேர்கோட்டு இயக்கம்**

109) புவிஈர்ப்புவிசை _____________ விசையாகும்..

**தொடா விடை**

110) மண்பாண்டம் செய்பவரின் சக்கரத்தின் இயக்கம் _______ இயக்கமாகும்.

**தற்சுழற்சி**

111) ஒரு பொருள் சமகால இடைவெளியில் சம தொலைவைக் கடக்குமானால் அப்பொருளின் இயக்கம் ________

**சீரான இயக்கம்**

112) பருப்பொருள் என்பது _______ ஆல் ஆனது.

**அணுக்கள்**

113) நெற்பயிரிலிருந்து நெல்லை _______ முறை மூலம் பிரித்தெடுக்கலாம்.

**கதிரடித்தல்**

114) 'உப்புமா' வில் _______ முறையில் மிளகாயினை நீக்கலாம்.

**கைகளால் தெரிந்தெடுத்தல்**

115) நீரில் இருந்து களிமண் துகள்களை நீக்க ______ முறை பயன்படுத்தப்படுகிறது.

**வடிகட்டுதல்**

116) ஊசி, பென்சில் மற்றும் இரப்பர் வளையம் இவற்றில் ______ காந்தத்தால் கவரப்படும்

**ஊசி**

117) குழாய்க் கிணறுகளில் இருந்து பெறப்படும் நீர் பொதுவாக ____ நீராக அமையும்.

**கலங்கலான**

118) புவிப் பரப்பு _____ % நீரால் மூடப்பட்டுள்ளது.

**70%**

119) பூமியில் காணப்படும் மிகவும் வறண்ட பகுதி ______

**பாலைவனம்**

120) ஊன்றுதல், உறிஞ்சுதல் இரண்டும் ________ன் வேலை

WHATSAPP 8056206308

**வேரின்**

121) ஆணிவேர்த் தொகுப்பு _______ தாவரங்களில் காணப்படுகிறது.

**இருவித்தலைத்**

122) நீர் நிலைகள், பாலைவனங்கள் மற்றும் மலைகள் ஆகியவற்றை ________ என்று அழைக்கலாம்.

**வாழிடம்**

123) செல் எண்ணிக்கையின் அடிப்படையில் விலங்குகளை ________ மற்றும் _______ என வகைப்படுத்தலாம்.

**ஒரு செல் மற்றும் பல செல் உயிரினங்கள்**

124) பறவைகளின் வால் திசை திருப்புக் கட்டையாக செயல்பட்டு _______ க்கு உதவுகிறது.

**கட்டுப்படுத்துவதற்கு**

125) அமீபா ________ உதவியுடன் இடப்பெயர்ச்சி செய்கிறது.

**போலிக்கால்கள்**

126) மழைக்காடுகள், புல்வெளிகள் மற்றும் பாலைவனங்களை _______ என்று அழைக்கிறோம்.

**வாழிடம்**

127) ஒரு செல்லால் ஆன உயிரினங்கள் ________ என்று அழைக்கப்படுகின்றன.

**ஒரு செல் உயிரிகள்**

128) மீனின் சுவாச உறுப்பு _______ ஆகும்.

**செவுள்கள்**

129) கால்களில் உள்ள வளை நகங்களின் மூலம் பல்லிகள் தரைகளில் _______

**நடக்கின்றன**

130) ஒட்டகங்கள் தங்கள் திமில்களில் ________ சேமிக்கின்றன.

**கொழுப்பு**

131) ஊட்டச்சத்துக் குறைபாடு ________ நோய்களுக்கு வழிவகுக்கிறது.

**சத்து குறைபாட்டு**

132) அயோடின் சத்துக்குறைபாடு பெரியவர்களில் _______ நோயை ஏற்படுத்துகிறது.

**காய்டர்**

133) டைபாய்டு நோய்,________ மற்றும் நீர் மாசுறுதலால் பரவுகிறது.

**உணவு**

134) குளிர்காய்ச்சல் (இன்புளுயன்சா) ___________ நுண்ணுயிரியால் ஏற்படுகிறது.

**வைரஸ்**

135) வைட்டமின் D குறைபாடு ________ நோயை ஏற்படுத்துகிறது.

**ரிக்கெட்ஸ்**

136) தரவு என்பது ______ விவரங்கள் ஆகும்.

**முறைப்படுத்தப்பட வேண்டிய விவரங்கள்**

137) உலகின் முதல் பொதுப் பயன்பாட்டு கணினி _______

**ENIAC(எனியாக்)**

138) தகவல் என்பது ____ விவரங்கள் ஆகும்

**முறைப்படுத்தப்பட்ட விவரங்கள்**

139) ஐந்தாம் தலைமுறைக் கணினி ______ நுண்ணறிவு கொண்டது

WHATSAPP 8056206308

# TNPSC SALES
# 6 TO 10TH

## CLASS 6 TO 10 SCIENCE MCQS ANSWERS 524 PAGES

## CLASS 6 TO 10 SOCIAL SCIENCE MCQS ANSWERS 641 PAGES

## CLASS 6 TO 10 அறிவியல் MCQ ANSWERS 403 PAGES

## CLASS 6 TO 10 சமூக அறிவியல் MCQ ANSWERS 745 PAGES

**EACH PDF COST RS.500**

**RAVI TEST PAPERS & NOTES**
**WHATSAPP – 8056206308**

WHATSAPP 8056206308